# அண்ணல் அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!



சேலம் கிழக்கு மாவட்டம் பனமரத்துப்பட்டி ஒன்றியம் அமானி கொண்டலாம்பட்டி ஊராட்சி சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் பற்றி அவதுறாக பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பதவி விலக கோரி கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர் உமாசங்கர், பேரூர் செயலாளர் ரவிக்குமார் மற்றும் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




நாமக்கல் மேற்கு மாவட்ட கழகம் சார்பில் சட்ட மேதை அம்பேத்கார் அவர்களை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நகரக் கழக செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய கழக செயலாளர் பழனிவேல், பேரூர் கழக செயலாளர் திருமலை, நகரமன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையேற்று கண்டன உரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் தயா.இளந்திரையன், இரா.கற்பகம் உள்ளிட்ட ஒன்றிய , நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி நிர்வாகிகள் , மகளிர் அணியினர் , பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் படத்தை கையில் ஏந்தி கண்டன முழக்கங்கள் எழுப்பி ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும். சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரை இழிவாக பேசிய அமித்ஷா மன்னிப்பு கேட்க வேண்டும் என கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். இந்த நிகழ்ச்சியில் மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மாநில தீர்மான குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைது தலைவர் நாகராஜ் , துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன் உட்பட அணிகளின் அமைப்பாளர்கள் , தலைவர்கள் , துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினார்கள்.



சட்டமாமேதை, டாக்டர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கடற்கரை சாலை அம்பேத்கர் மணிமண்டபம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமை வகித்தார். அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார், துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



தி.மு.க. தலைமைக் கழகம் அறிவிப்பின்படி, கோவை மாநகர் மாவட்ட திமுக, வடக்கு மாவட்ட திமுக சார்பில், புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் . அமித்ஷாவைக் கண்டித்து, கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தலைமையில், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநகராட்சி மேயர் இரங்கநாயகி, சி.ஆர்.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ.,அருண்குமார் எம்.எல்.ஏ., ஏ.பி.நாகராஜ் கோவை மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ,கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்எம்பி முருகன்,வடக்கு மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட துணைச் செயலாளர்கள் அசோக் ஆறுக்குட்டி, எம் என்.செந்தில்,ஜெயந்தி, பொருளாளர்கள் ரகுமான், தலைமைக் கழக நிர்வாகிகள் அ.தமிழ்மறை, வி.ஜி.கோகுல்,தலைமை கழகப் பேச்சாளர்கள் கோவை சம்பத், சிங்கை பிரபாகரன், சிங்கை சௌந்தர் உட்பட ஒன்றியக் கழக,பேரூர்க்கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அணிகளின் தலைவர்கள் துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகரக் கழக பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க்கழக, வட்டக்கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.





அண்ணல் அம்பேத்கர் அவர்களை அவமதித்த ஒன்றிய பா.ஜ.க. அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து திருவாரூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ,ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் என பெருந்திரளாக பங்கேற்றனர்.



புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக்கழகம் சார்பில் ஒசூர் ராம் நகர் அண்ணா சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ் தலைமையேற்று கண்டன முழக்கங்களை எழுப்பி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், மாவட்ட துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநகர செயலாளரும் மேயருமான எஸ்.ஏ.சத்யா, மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி, மாவட்ட பொருளாளர் சுகுமாரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீராரெட்டி, கிரீஸ், உட்பட பகுதி செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள், கழக தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்



நெல்லை கிழக்கு மாவட்டம் மற்றும் மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசிய ஒன்றிய அரசு உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து வண்ணார் பேட்டையில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன் மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன் கான் ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.நிகழ்வில் அப்துல்வஹாப்எம்.எல்.ஏ.மாலைராஜா,ஆவின்ஆறுமுகம்,கணேஷ்குமார்ஆதித்தன்,விஜிலாசத்யானந்த்,சித்திக்,சரவணன்,தர்மன்,சுரேஷ், கிரிஜா குமார்,கருப்பசாமி கோட்டையப்பன், முருகன்,ஆ.க.மணி, அருள்மணி,ராஜ்,உலகநாதன், கந்தன்,மீரான் மைதீன்,அனிதா, அண்ணாதுரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி தபால் நிலையம் முன் சட்ட மாமேதை அம்பேத்கரை அவமதிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .உடன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர்கள் இணைச் செயலாளர் ஜெகவீரபாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி இராம.இளங்கோவன் முத்து.மகேந்திரா மாவட்ட கழகஅவைத்தலைவர் கே ஜி சீனிவாசன், துணை செயலாளர்கள் மு ஞானவேலன், எஸ்.செல்வமணி,கண்ணகி, மாவட்ட பொருளாளர் மகா. அலெக்சாண்டர், மயிலாடுதுறை, நகர செயலாளர் குண்டாமணி ( எ ) என். செல்வராஜ் மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு பணி நிர்வாகிகள் உள்ளனர்.